**DEPOSITION OF WITNESS**
**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC 35 of 2020** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

| | | | |
|---|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution** | : | **PW1** |
| | **Defence** | : | |
| | **Court** | : | |

**Name**/பெயர் : எம்.பி.புளோரா

**Father's/ Husband Name :** ஜான்ஹென்றி
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.03.2022.**

**முதல் விசாரணை**

**நான் இலால்குடி டீச்சர் நகரில் வசித்து வருகிறேன். நான் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் அப்பா பாலசுப்ரமணியன் என்பவர் பால் வியாபாரம் செய்து வருகிறார். எதிரியும் எங்கள் தெரு வழியாக வந்து செல்வார். எதிரி மேலவாழையை சேர்ந்தவர். 27.12.2019 அன்று தேர்தல் நடந்தது.**

எனது மகன் சக்கரவர்த்திஅசோகன் தேர்தல் பணியாக சென்றுவிட்டு அன்று அதிகாலை 4 மணிக்கு வீட்டிற்கு வந்து மாடிக்கு படுக்க சென்றுவிட்டான். எனது கணவர் தரைதளத்தில் உள்ள ஒரு அறையிலும், நான் ஹாலிலும் படுத்திருந்தேன். அன்று காலை சுமார் 6 மணிக்கு எனது வீட்டின் ஹால் கதவை திறக்கும் சத்தம் கேட்டது. நான் எழுந்து பார்த்த பொழுது எதிரி சுகுமார் வீட்டின் உள்ளே உள்ள சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்தார். நான் எதிரியை பார்த்து நீ யார் எங்கு வந்தாய் என்று கேட்டேன். அப்போது எதிரி என்னை பிடித்து தள்ளி கொண்டே சமையல் அறைக்கு சென்று என்னை தள்ளி அங்கிருந்த முழுமையாக நிரப்பப்பட்டிருந்த சிலிண்டரில் அழுத்தினார். அதில் எனக்கு இடது பக்க நெற்றி, இடது முட்டி, வலது முழங்காலின் கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டது. பின்னர் எதிரி எனது கழுத்தில் கிடந்த ஒன்றரை பவுன் உள்ள கருகமணி கலந்த இரட்டை வட கோல்டு செயினையும், கட்டிங் மாடல் உள்ள சிலுவை போட்ட இதய வடிவில் உள்ள டாலர் போட்ட தாலி செயினையும் அறுத்து கொண்டு ஓடிவிட்டார். எதிரியை நானும் எனது கணவரும் விரட்டி கொண்டு சென்றோம். அப்போது அங்கு கார் மறைவில் நிறுத்தி இருந்த இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். அப்போது எதிரி அணிந்திருந்த பச்சை நிற சட்டை, கருப்பு கலர் பேண்டினையும் பார்த்தேன். எனது மகனும் மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடி வந்தான். செயினை அறுத்து சென்றது பால்காரர் மகன் தான் என்று சொன்னார்கள். பின்னர் 11 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு போலிசார் எதிரியிடமிருந்து ஒரு நகையை மட்டும் கைப்பற்றியதாக சொன்னார்கள். எனக்கு முழு நகையும் கொடுத்தால் தான் வாங்கி கொள்வேன் என்று சொன்னேன். அதன் பிறகு போலிசார் சொன்னதின் பேரில் நான் கருகமணியுடன் சிலுவை போட்ட தாலி செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன்.

அந்த நகையை நான் பூண்டி மாதா கோவில் உண்டியலில் போட்டுவிட்டதால் இன்று எடுத்து வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகளை தான் நான் நீதிமன்றத்தில் பெற்றுச் சென்றேன். அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>கு.வி (எதிரி தரப்பில்)</u>

புகாரை நான் தான் எழுதினேன். எனது புகாரில் இரண்டு செயின்களை திருடிவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எனது நகைகள் எதுவும் திருடபோகவில்லை என்பதால் தான் எனது புகாரில் திருடுபோனதாக கூறப்படும் நகைகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது திருட்டில் ஈடுபட்டது எதிரி தான் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல திருடியது எதிரி தான் என்பது எனக்கு தெரியும். எதிரியின் உடைகளை பார்த்து தான் அடையாளம் சொன்னேன். அதன் பேரிலேயே எதிரியை போலிசார் கைது செய்தார்கள். எதிரியை அவரது வீட்டில் வைத்து தான் போலிசார் கைது செய்தார்கள் நானும் அதை பார்த்தேன். எங்களது காரில் தான் எதிரியை போலிசார் ஏற்றினார்கள். எங்களுக்கும் பால் வியாபாரம் செய்யும் எதிரியின் அப்பாவிற்கும் முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று காலை 9 மணிக்கு எதிரியின் அப்பா எனது வீட்டிற்கு வந்து பால் பணம் தராமல் இருப்பது தொடர்பாக கேட்டதால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது அதன் தொடர்ச்சியாக தான் நான் காவல் நிலையம் சென்று எதிரி மீது பொய்யாக புகார் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களது வற்புறுத்தலின் காரணமாகவே எதிரியை போலிசார் கைது செய்தார்கள் என்றாலும், எதிரியிடமிருந்து எந்தவிதமான நகையும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் கைதிற்கு பின்னர் எனது நகையை வாங்கி எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக

போலிசார் பொய்யாக ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் எனது கழுத்தில் அணிந்திருந்த நகைகளை எதிரி பறித்து சென்றிருந்தால் எனது கழுத்தில் காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்காததாலேயே எனது கழுத்தில் காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அப்பாவிற்கும் எனது கணவருக்கும் தகராறு ஏற்பட்டது இடையில் சென்ற என்னை எனது கணவர் தள்ளிவிட்டதாலேயே எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் 6 மணிக்கு சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்த அரை மணி நேரத்திற்கு உள்ளாக நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்திருப்பேன் என்றாலும், சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் காலை 11 மணிக்கு புகார் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் எனது வீட்டில் நடந்திருந்தால் எதிரியை எனது மகனும் கணவரும் பிடித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.